# தேம்பாவணியில் அறச்சிந்தனைகள்

*முனைவர் சு. ஜெயக்குமாரி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6416

## முன்னுரை

இலக்கியங்கள் தனிமனித அறத்தை மேம்படுத்தும் காரணிகளாக அமைந்து। வாழ்வியல் வழிகாட்டியாக விளங்குவது தமிழ் இலக்கிய உலகம் பெற்ற பெரும் பேறு. தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும். அவை எவ்வகையான இலக்கிய வகையாக இருந்தாலும் பக்தி. காதல், வீரம், சமூகம் என அறக்கருத்துக்களை விதைப்பனவாகவே காணப்படுகின்றன. ஏனெனில் சமூகத்தில் மனிதன் சிறப்புடன் வாழவும்இ தனித்தப் பண்புகளைப் பெறவும்இ புகழ் நிலைபெறவும் அறச்சிந்தனையுடன் வாழ்வது அவசியமாகிறது. அவ்வகையில் கிறித்தவக் காப்பியமான தேம்பாவணி கூறும் அறச்சிந்தனைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தேம்பாவணி - வீரமாமுனிவர்

ஐரோப்பிய மொழிகளுள் ஒன்றாகிய இலத்தீன் மொழியில் திருக்குறளை (அறத்துப்பால், பொருட்பால்) முதன் முதலில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர். திருக்குறளை கற்றுத் தேர்ந்ததன் விளைவால் அவர் இயற்றிய தேம்பாவணி முழுவதும் குறட்கருத்துக்கள் விரவிக் கிடக்கின்றன. குறள் கூறும் அறமும் இந்நூலில் மிகுதி. ஐரோப்பா மாகாணம் இத்தாலியில் பிறந்தவர் கான்ஸ்டன்டைன் பெஸ்கி தன் மதத்தைப் பரப்பும் நோக்கில் இந்தியா வந்த பெஸ்கி தன் பெயரை தைரியநாதர் என மாற்றினார். பின்னர் அப்பெயர் தமிழ்ப் பெயரல்ல என்பதை உணர்ந்து வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார்.

இவர் இயற்றிய தேம்பாவணியே, இவரின் நூல்களுக்கெல்லாம் மணிமகுடமாக அமைந்து காணப்படுகிறது. தேம்பாவணி மூன்று காண்டங்களையும் 3615 விருத்தப்பாக்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கியது.

இக்காப்பியம், மக்களின் வாழ்வியல் குறித்த கருத்துக்களையும் அறத்தின் பெருமைகளையும் ஒழுக்க நெறிகளைக் கடைபிடித்து வாழ்வதையும் பிறருக்குக் கொடுத்து வாழும் ஈகை வாழ்வையும் தூய தவத்தினால் அடைகின்ற மோட்ச வாழ்க்கைக்காக உயிர்களைப் பேணுதல் அன்புகாட்டுதல் கொல்லாமை போன்ற கருத்துக்களை எடுத்தியம்புகிறது.

**அறத்தின் சிறப்புகள்**

திருவள்ளுவர் அறத்தை வலியுறுத்தும் பொருட்டு

**"அறம் உயிர்க்குத் துணையாவது"**

**குறள்.31**

என்கிறார். அதுமட்டுமன்றி,

**"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகளும் இல".**

**குறள்.39**

என்று கூறுகிறார். இன்பமாக வாழ்வதற்கு அறமே அடிப்படை மற்ற வழிகள் துன்பத்தைத் தரும் என வலியுறுத்துகிறார். இன்ப வாழ்விற்கு அறத்தை தலையாயதாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் தமிழர் வாழ்வியலின் மூன்று கோட்பாடுகளாகக் கொள்ளப்படுபவை அறம் பொருள் இன்பம் இவற்றுள் அறமே தலையாயது.

அறம் என்ற சொல்லுக்கு கடமை தருமம் புண்ணியம் நல்வினை என பல பொருட்கள் உண்டு

சங்க காலம் தொட்டு இன்றைய இலக்கியங்கள் வரையிலும் அறத்தைப் பற்றி கூறாத இலக்கியங்களே இல்லை எனலாம்.

வீரமாமுனிவர் யுதேய நாட்டின் வளத்தினை சுட்டிக்கூறுமிடத்து அறத்தின் சிறப்பினை வலியுறுத்துகிறார்.

**"அறத்தில் துறும் புகழ் ஒளபுகழ் என்னும்**
**அடும்பகை நின்றனர் கொல்**
**திறத்தில் துறும் புகழ் வஞ்சனை என்றும்"**
**-தேம்.நாட்டுப்படலம்இபா.71**

என்னும் பாடலில் யுதேய நாட்டு மக்கள் அறத்தின் வழி அடையும் இன்பத்தை உணர்ந்து வாழ்ந்து வந்தனர் என்று குறிப்பிடுகிறார்.

**துன்பத்திலும் அறம் செய்தல்**

இன்பம் துன்பம் இவ்விரண்டும் உலக வாழ்க்கையில் சுழல் போல வரும் தன்மை உடையது. நாம் செய்யும் நற்செயல்களுக்கு துன்பம் ஒரு தடையாக அமைந்து விடக் கூடாது.

எல்லையற்றத் துன்பங்கள் நம்மை இடைவிடாது தொல்லைப்படுத்தும் காலத்திலேயும் அறத்தைக் கைவிடாமல் துயப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றிட வேண்டும்.

**"வேர்ப்பு எழக் கயல் விழியர் கை வளை**
**ஆர்ப்பு எழக் கடை தயிரில் ஆய நெய்**
**கூர்ப்பு எழத் துயர்குறுக மேல் அறம்**
**ஓர்ப்பு எழ செய்வோர் இயல்பு மானுமே."**
**-தேம்.நாட்டுப்படலம்இபா.22**

**புலனடக்கம்**

புலனடக்கம், தனி மனித அறங்களுள் ஒன்று, ஐம்புலன்களையும் ஆள்வது. ஐம்பொறிகளால் விளையும் இன்ப வழிகளிலே மனம் அலைபாய்வதைத் தடுத்து மனதை அறவழியில் செலுத்த வேண்டும்.

பொங்கி வரும் நீரை உழவர்கள் அணை கட்டி தடுத்து அதனை வாய்க்கால் மூலமாக வயல்களுக்கு கொண்டுச் செல்வதன் மூலம் பயனுடையதாக்கலாம். அதுபோல புலக் கட்டுப்பாடு மூலம் சிந்தனைகளை செதுக்கினால் அறவோர் ஆக விளங்க முடியும். இதனை

**"செறி உலாம் புனல்சிறை செய்து பயன்பட ஒதுக்கி**
**வெறி உலாம் மலர் மிடைந்து அகல் வயல் வழிவிடுவார்**
**பொறி உலாம் வழிப்போக்கு இலது இயல்பட அடக்கி**
**நெறி உலாவு அற்றிவோர் அலை நிறுத்தனர் போன்றே."**
**-தேம்.நாட்டுப்படலம்இபா.10**

என்னும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

புலனடக்கலுக்கு இன்னுமொரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக

**"நோக்க இன்பு உளம் நுகர ஒள முளரியொடு ஆம்பல்**
**நீக்கு அலாது எலாம் நீர் மலர்களை எனகட்டல்**
**ஆக்கம் ஆக்கினும் அறன் இழந்து ஆவதுகே என்று**
**ஊக்க மாண்பினர் ஒருங்கு அவை ஒடுக் குதல் போன்றே."**

**-தேம்.நாட்டுப்படலம்இபா.13**

என்னும் பாடலில் தாமரை, ஆம்பல் போன்ற மலர்கள் கண்ணுக்கு அழகானவை தான் அதுவே வயலில் இருந்தால் களையாகக் கொள்ளப்படும். உழத்தியர் அவற்றைப் பறித்து வீசுவர் என்னும் காட்சியுடன், அறநெறி

அல்லாத வழியில் வரும் செல்வங்கள் சுகங்களைத் தந்தாலும் அவை அழிவினையே தரும் எனவே அறவழியில் பொருள் ஈட்ட வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது தேம்பாவணி.

**அன்பு**

உலக உயிர்கள் அனைத்தும் அன்பினாலயே இயங்குகின்றன. உலகை ஆளும் மிச்சிறந்த ஆயுதம் ஒன்று உண்டெனில் அது அன்பு ஒன்றே தான்.

தேம்பாவணி சூசையின் பெருமையைக் கூறுமிடத்து இவ்வுலகில் வருந்தும் உயிரை உடைய மக்கட்க்கு எல்லாம் மிகுந்த துணையாக திகழ்கின்றார் என்று கூறுகிறது.

**"அன்பு வாய்ந்த உயிர் நிலை அஃதிலார்க்கு**
**என்பு தோல் உடல் போர்த்த தென்று அன்புறை**
**இன்பு தோய்ந்த நிலையெதை தானிவண்**
**துன்பு காய்ந்த உயிர்துணை ஆயினான்."**

**- தேம்.நாட்டுப்படலம்இபா.65**

மட்டுமின்றி உள்ளத்தில் பொருந்திய அன்பு கொண்டவர்கள் பிறர் வேண்டும் போது தன் எலும்பையும் அறுத்தெடுத்து உறுதியாக வழங்குவர். தன் உயிரோடு உடல் உறுப்புகள் அத்தனையும் மக்கள் மீட்புக்காக வழங்கிய இயேசு பெருமானின் அருள் வள்ளல் தன்மை போன்று வேறு எவராவது இருக்கின்றனரோ? என கேள்வி எழுப்புகிறார் வீரமாமுனிவர் இதனை,

**"அன்புடையர் என்பும் அரிந்தளிப்பார் தன்னுயிரோடு**
**என்புடைய மெய்யெல்லாம் ஈந்துணர் வென் பான் யாரே**
**ஈய்ந்துணைவென்று எவ்வுயிருக்கும் எவ்வுணவும் ஈட்டியவண்**
**வேய்ந்துணந்தான் உண்ணிரந்த நீயல்லால் வேறு யாரோ."**

**-தேம்பாவணி**

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**வீரம்**

தாவீதின் வீரத்தைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து தாவீது ஆண் சிங்கத்திற்கு ஒப்பானவன். எந்த பொய்யும் உண்மைக்கு முன் நிற்காது. அதைப் போன்று, தாவீதின் முன் பகைவர் நிற்க மாட்டார்கள் என உவமிக்கப்பட்டுள்ளது.

**"மொய்முனர் பின்றிலா முரண்கொடு ஏறெனா**
**மெய்முனர் பொய்யென வெருவொன் னாரிவன்**
**கைமுனர் நிற்கிலா கலங்கிப் போற்றும் போர்**
**செய்முனர் செயும் செயும் சிங்க வாகையான்."**

**-தேம்.வளன்சனித்தபடலம்இபா.4**

**ஆசையை அழித்தல்**

ஆசை என்பது அனைத்து உயிருக்குள்ளும் இருக்கும் விதை போன்றது. அது எப்பொழுது முளைக்கும் என்று எவராலும் அளவிட முடியாது. ஆசையை அடக்கி ஆளக்கற்றுக் கொண்டால் அது போன்ற சிறப்புடைய தன்மை ஒன்று இவ்வுலகில் இருக்காது. ஆசை தரும் தீங்கையும் அதை ஒழிப்பது குறித்தும் தேம்பாவணி சிறப்பாக எடுத்தியம்புகிறது.

பாம்பின் நஞ்சு உடலுக்குத் தீங்குதரும் உயிரைப் பறிக்கும். அத்தகைய கொடிய நஞ்சேறிய உடலைக் கூட குணப்படுத் திவிடலாம் ஆனால் மனிதனின் ஆன்மாவையே அழிக்கும் நஞ்சு போன்றது ஆசை. அது மனிதனையே அழிக்கும் அளவுக்கு கொடுமையானது. எனவே நம் மனதினுள் ஆசை புகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதனை

**"பைம்பொறி அரவின் நஞ்சில் பழிப்படப் பகைத்துக் கொல்லும்**
**ஐம்பொறி அன்றிச் சூழ்ந்த அனைத்துமே பகைத்த காலை**
**செம்பொறிப் பெய்த பைம்பு சிதைந்தென உளமும் ஏங்கி**
**வெம்பொறியாக ஆற்றா வேட்கையே."**

**-தேம்இபாலமாட்சிபடலம்இபா.31**

**ஒழுக்கம்**

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது வள்ளுவர் வாக்கு. ஒழுக்கம் உடையவர் வாழ்வில் எல்லா புகழும் வந்து சேர்வதோடு

ஒழுக்கம் உடையவர் காலம் தாண்டியும் வாழ்வார். வீரமாமுனிவர் மரியாளின் ஒழுக்கத்தைப் பற்றி கூறுமிடத்து

**“என்று உதிர் இரவில் வில் எதிர்திருப்பல் ஆ**
**நின்று உதிர் பளிங்கென நிரம்பி ஓதிய**
**தன்துதி அடங்கலும் தனது நாதனைத்**
**துன்துதி ஆக்கினள் பளிங்கில் தூயினள்.”**
**-தேம்.ஐயம்நீங்குபடலம்இபா.42**

என்கிறார். அதாவது கண்ணாடி உடைந்து போகும் என்று பத்திரமாக வைத்திருப்பார். அந்த கண்ணாடி போன்று குற்றமில்லா பளிங்கு போலும் தன்மையுடையவள் மரியாள் என அவள் ஒழுக்கம் பேசப்பட்டுள்ளது.

ஒழுக்கத்திற்கு மன உறுதி தேவை. நெருப்பானது எதையும் அழித்து விடும். அதைப்போல் எந்த துன்பம் வந்தாலும் அதை அழித்துவிடும் மனஉறுதி மரியாளிடம் காணப்பட்டது. நெருப்பில் போட்டாலும் தங்கம் தன் நிலை குன்றுவதில்லை. அதைப்போல் மரியாளின் மனஉறுதி இருந்தது. இதனை,

**“.. .. ... மனம் கலங்க துயர் வரினும்**
**நெருப்பிற்கு அஞ்சாத்**
**தேசென்று குலையா நெஞ்சு உறுதி எஞ்சா**
**சேல் அல்லற்கு உயர்ந்த திறம் காட்டு தற்கே.”**
**-தேம்.ஐயம்நீங்குபடலம்இபா.54**

என்னும் பாடல் வழி அறியமுடிகிறது.

### நிறைவுரை

இவ்வுலகில் நன்மை தீமை இரண்டும் கலந்தே இருக்கின்றது. எனவே நாம் நம் வாழ்வியலுக்குத் தேவைப்படும் நன்மையை மட்டும் தேர்ந்தெடுத்து நல்ல வழியில் நடக்க வேண்டும். இதனை வீரமாமுனிவர் “நிறைந்து கிடக்கின்ற யாவற்றையும் ஆராய்ந்து பார்த்துத் தீயதாகத் தோன்றும் யாவற்றையும் விலக்கி சிறந்த பயன் தருவனவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிறார். (பாலமாட்சிபடலம். பா-59)

இதன் மூலம் வாழ்க்கையை நல்வழியில் நடத்தும் நெறிமுறைகள் யாவும் அறநெறிமுறைகளே என அறிந்து கொள்ள முடியும். இவற்றைப் பின்பற்றினால் இன்றைய சமூகம் மட்டுமல்ல எதிர் வரும் சமூகமும் சிறப்புடன் திகழும்.

### ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - தமிழ்நிலையம, (மூலமும் தெளிவுரையும்) 40இசரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை.
2. தேம்பாவணி - வி.மேரிய அந்தோணி (மூலமும் உரையும்) வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம், பாளையங்கோட்டை,1982.